**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**
**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2025 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08 ம் நாள் திங்கட்கிழமை**

**E.A.No.01/2025**
**in**
**EP.No.03/2023**
**in**
**OS.No.106/2008**

1. சோலையம்மாள்
2. பசுபதி ...மனுதாரர்கள்/1, 2 வாதிகள்

/எதிர்/

சாமிநாதன் ......1 ம் எதிர்மனுதாரர்/ 1 ம் பிரதிவாதி

1.மங்களேஸ்வரி
2. மாசானம் .....2, 3 எதிர்மனுதாரர்கள் (1 ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள்)

இந்த இடைநிலை மனு என் முன்பாக 08.12.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/1, 2 வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.இராமமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுவில் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர்கள்/1, 2 வாதிகள் தரப்பில் நிறைவேற்றுதல் மனுவினை திருத்தம் செய்து உத்தரவிடக்கோரி கட்டளை 6 விதி 17 பிரிவு 151ன் படி கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>**

மனுதாரர் அசல் E.P. மனுவின் மனுதாரர் என்றும், மேற்படி அ.வ.எண்.106/2008 என்ற அசல் வழக்கு தாக்கலாகி மேற்படி வழக்கு மனுதாரர்/வாதிக்கு ஆதரவாக கடந்த 12.07.2016 ம் தேதி தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டதன் அடிப்படையில், எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடமிருந்து டிகிரியை நிறைவேற்றுதல் செய்ய ஏதுவாக E.P.No.03/2023 என்ற நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனு பரிகாரத்தில் சில வரிகள் தவறுதலாக அச்சிடப்பட்டுள்ளதால் அதனை திருத்தம் செய்ய வேண்டும் என்றும், மனுவில் சொத்து விபரத்தில் மனுதாரர்களுக்கு சாதகமாக கடந்த 12.07.2016 ம் தேதி ஏற்பட்ட சிவில் நீதிமன்ற தீர்ப்பை அவமதித்த குற்றச்செயலுக்காக எதிர்மனுதாரர்களை கைது செய்து சிவில் சிறையில் அடைக்கவும், மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்பீட்டை ஈடு செய்ய எதிர்மனுதாரர்களின் வேறு சொத்தை ஜப்தி செய்து ஏலமிட்டு மனுதாரர்களுக்கு வழங்கக்கோரி என நிறைவேற்றுதல் மனுவை திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர்.

3) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

இம்மனுதாரர் அசல் வழக்கின் வாதியாவார். அசல் வழக்கில் கடந்த 12.07.2016 ம் தேதியன்று வாதிக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரர் நிறைவேற்றுதல் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி நிறைவேற்றுதல் மனுவின் பரிகாரத்தினை திருத்தம் செய்து மனுவை மேல்நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவினை ஆட்சேபனை செய்யும் விதமாக எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வாதம் செய்யாமல் எதிர்மனுதாரருக்கு எதிராக கடந்த 27.11.2025 ம் தேதியன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அசல் வழக்கின் தீர்ப்பானது கடந்த 12.07.2016 ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த 9 வருடமாக எதிர்மனுதாரர் மனுதாரருக்கு தாவா சொத்தின் சுவாதினத்தை ஒப்படைப்பு செய்யாத காரணத்தினால் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் அசல் வழக்கில் இதுநாள்வரை எந்தவொரு மேல்முறையீடும் தாக்கல் செய்ததாகவும் ஆட்சேபனை செய்யவில்லை. எனவே மனுவில் கோரியுள்ள பரிகாரங்களை மனுதாரருக்கு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

**மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 08.12.2025 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2025.12.08 17:16:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

<u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>**:** இல்லை.

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>**:** இல்லை.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2025.12.08 17:16:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

E.A.No.01/2025
**in**
E.P.No.03/2023
**in**
O.S.No.106/2008

Date: 08.12.2025
EA order